களை நீக்குகிறார்கள், மற்றொரு புறத்தில் பிராஜெக்ட் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்,'' என்று தோன்றும். என்னைப் பொருத்தவரையில், இந்த மின்சார இலாகாவின் தொழிலாளர்களுடைய ஒத்துழைப்பு இல்லாவிட்டால் இந்த அளவுக்கு வெற்றி ஏற்பட்டிருக்காது. அவர்களுக்கு வருத்தம் எவ்வளவு இருந்த போதிலும், உண்மையாக நல்ல முறையில் அவர்கள் ஒத்துழைப்பைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தொழிலாளர்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதில் என்னால் ஆன முயற்சியைச் செய்வேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விவாதத்தில் சொல்லப்பட்ட அரிய யோசனைகளுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே சொல்லப்பட்ட கருத்துக்களை சட்டத்தில் கண்டுள்ளபடி போர்டார் பரிசீலனை செய்வார்கள் என்று சொல்லிக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM: On a point of clarification. கடந்த ஐந்தாண்டு காலமாக ஆடிட் ரிப்போர்ட் இந்த சபை முன்பு வைக்கப்பட வில்லை என்று நான் சுட்டிக் காட்டியபொழுது, அமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய அறியாமையைச் சுட்டிக் காட்டினார்கள். எங்களுக்கு அறியாமை இருப்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். எங்களுக்கு ஞான வெளிச்சம் கொடுப்பதற்கு காரியதரிசிகளும், ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும் கிடையாது. அமைச்சர்கள் எல்லாம் தெரிந்தவர்கள். அமைச்சர் அவர்கள் இந்த இலாக்காவிலே தேய்மானத்துக்கு என்று நிதி ஒதுக்குவது கிடையாது, கணக்கு வைப்பது கிடையாது என்று கூறினார்கள். கனம் அமைச்சர் அவர்கள் பார்லிமெண்டிலும் அங்கத்தினராக இருந்திருக்கிறார்கள். இங்கேயும் அமைச்சராக இருக்கிறார்கள். நான் என் கையில் 1957-58-ம் வருடத்திய ஆடிட் ரிப்போர்ட்டை வைத்திருக்கிறேன். பைக்காரா ஹைட்ரோ எலெக்டிரிக் ஸ்கீமின் 1957-ம் ஆண்டு ஜூன் 30-ம் தேதி முடிவான காலத்திற்கான பாலன்ஸ் ஷீட் அதிலே இருக்கிறது. அதிலே டெப்ரீஸியேஷன் பண்டுக்கு ஒதுக்கி இருக்கிறார்கள். கண்ணை மூடிக்கொண்டு தேய்மான நிதிக்கு ஒதுக்க முடியாது. அதற்கு விதிகள் இருக்கின்றன. ஸிவில் வொர்க்ஸாய் இருந்தால் அதனுடைய ஆயுள் காலம் எவ்வளவு, தேய்மானம் எவ்வளவு பெர்ஸெண்ட் என்றிருக்கிறது. அதேமாதிரி டூல்ஸ்களாய் இருந்தால், அவற்றின் ஆயுள் காலம் எவ்வளவு, தேய்மானம் எவ்வளவு சதவிகிதம் என்றிருக்கிறது. சர்க்கார் அண்டர்டேக்கிங்கில் உள்ள பஸ் ஆக இருந்தால், அதனுடைய ஆயுள் காலம் எவ்வளவு, எவ்வளவு சதவிகிதம் தேய்மானம் ஒதுக்க வேண்டுமென்று விதிகள் இருக்கின்றன. அதிலே அறியாமை யாருக்கு என்று சபை ஒரு முடிவுக்கு வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: நான் சொன்னது தவறாக இருந்தால், அதைத் திருத்திக்கொள்ள எனக்கு அப்ஜெக்ஷன் கிடையாது. கனம் அங்கத்தினர் சொன்னதுபோல், அமைச்சர்களுக்கு இலாகாவில் உள்ளவர்கள் எழுதிக்கொடுப்பதுதான் தெரியும். உலகம் பூராவும் தெரியும் என்று சொல்வதற்கில்லை. 68-வது பிரிவின்படி ஒவ்வொரு மெஷினுக்கு எடுத்துப் போட வேண்டும், அந்தமாதிரிக் கணக்குப் போடவில்லை என்றுதான் நான் சொன்னேன்.

V. ANNOUNCEMENTS—*cont.*

(2) PROGRAMME FOR THE BUDGET SESSION.

MR. SPEAKER: The Annual Financial Statement (Budget) for the Financial Year 1962-63 will be presented to the Assembly on 30th June 1962. In consultation with the Hon. Leader of the

[Mr. Speaker] [7th May 1962

House and the Business Advisory Committee, I have appointed the following dates under sub-rule (2) of Rule 153 of the Assembly Rules :—

General discussion—6 days from 2nd July to 7th July 1962.

Voting of Demands for Grants—17 days from 9th July to 27th July 1962 excluding Sundays.

Appropriation Bill—Consideration and passing of—28th July 1962.

1-30 p.m. On 30th July 1962 and if necessary on 31st July 1962 Official Bills will be considered.

The House will now adjourn and meet again at 11 a.m. on Saturday, the 30th June 1962.

The House then adjourned.

VIII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

* 62. *Notification issued with G.O. Ms. No. 434, Local Administration, dated 22nd February 1962, amending the " Restrictions and Control over execution of Kudimaramat by Panchayat Union Councils—Levy of fees by Panchayat Union Councils Rules ", published with Rural Development and Local Administration Department Notification S.R.O. No. A-385 of 1960, dated the 8th October 1960 (Notification No. 25), at pages 27 and 28 of the Supplement to Part V of the* Fort St. George Gazette, *dated the 12th October 1960, the same having been previously published. [Laid on the table of the House under section 179(4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]*

* 63. *Notification issued with G.O. Ms. No. 1732, Industries, Labour and Co-operation, dated 21st March 1962, amending the Madras Weights and Measures (Enforcement) Rules, 1958, published with the Industries, Labour and Co-operation Department Notification S.R.O. No. A-7625 of 1958, dated the 15th November 1958, at pages 1-55 of Part I of the* Fort St. George Gazette *Extraordinary, dated the 1st December 1958, as subsequently amended. [Laid on the table of the House under section 43(4) of the Madras Weights and Measures (Enforcement) Act, 1958 (Madras Act XX of 1958).]*

B. Reports, Notifications and other Papers.

† 29. *Speech of Hon. Sri R. Venkataraman, Minister for Industries, initiating the discussion on the Annual Financial Statement of the Madras State Electricity Board for the year 1962–63 in the Madras Legislature.*

* Placed on the table of the House on 5th May 1962.

† Circulated to Members on 4th May 1962.